**அக்டோபர் - 19**

**"இலவசமாய் பெற்றீர்கள், இலவசமாய் கொடுங்கள்." - மத் 10 : 8.**

நம்மை மிகவும் அதிகமாக இளைப்பாற்றியிருக்கிற பலப்படுத்தியிருக்கிற அந்த பாக்கியமுள்ள ஆகாரத்திற்காக பசியுடனிருக்கிற, தாகமாயிருக்கிற எல்லோருக்கும் அதைக் கொடுக்கத் தயாராக உள்ள நிலையில் இருப்போமாக. அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ளாவிட்டால், மற்ற ஆகாரத்திற்காக தேடி அலையும் போது வழியில் அவர்கள் மயக்கமடைவார்கள். விசுவாச வீட்டார் அனைவருக்கும் வேண்டியிருக்கிற அந்த ஆகாரம் நம்மிடம் இருக்கிறது. அதில்லாமல் அவர்களால் தங்களுடைய நிலையை பராமரிக்க முடியாது. அவர்கள் தொடர முடியாது. அவர்கள் நிச்சயமாகவே அதைரியமடைவார்கள். ஜீவ அப்பத்தை மற்றவர்களுக்கு அனுப்புவதற்காக பணசம்பந்தமான எதுவாகிலும் நம்மிடம் இருந்தாலும், அல்லது சத்தியத்தின் அறிவு எதுவாகிலும் நம்மிடம் இருந்தாலும், அது சுயநல நோக்கத்தோடு திரட்டி வைத்துக் கொள்ளவோ, அல்லது சுயநலத்தோடு நாமே பங்கு கொள்ளுவதற்கோ அல்ல. அது கர்த்தருக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும். அந்தப் பிரதிஷ்டையிலிருந்து கர்த்தர் மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தையும், நம்முடைய சொந்தத் தலைக்கும் இருதயத்திற்கும் கூடுதலான ஆசீர்வாதங்களையும் கொண்டு வருவார். **- Z ’04, 78 (R 3332)**

நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தேவனுடைய ஈவுகளை மறுபடியும் யோசனை செய்யும்போது, எவ்வளவு இலவசமாக அல்லது எவ்வளவு தாராள மனதுடனும், கிருபையும், சிருஷ்டிப்பு, பராமரிப்பு, மீட்பு, போதித்தல், நீதிமானாக்குதல், பரிசுத்தமாக்குதல் விடுதலை ஆகியவைகளின் ஆசீர்வாதங்களை அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார் என்பது வெளிப்படுத்தப்படுகிறது. ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் இந்த ஆசீர்வாதங்கள் கொண்டிருக்கின்றன. உண்மையாகவே, நாம் இலவசமாய் பெற்றிருக்கிறோம். ஆகையால், அதே ஆவியில் நம்முடைய அறிவையும், அன்பையும், சமயத்தையும், சக்தியையும், பணத்தையும், ஆரோக்கியத்தையும், ஜீவனையும், ஊழியத்தையும், ஓய்வையும், செல்வாக்கையும், நன்மதிப்பையும், பாதுகாப்பையும், ஆம் நம்மிடமுள்ள கொஞ்ச மனுஷீகத்தின் எல்லாவற்றையும், நன்மையான எந்த ஈவையும், பூரணமான எந்த ஈவையும் கொடுக்கிறவராகிய நம்முடைய பிரிய பரமபிதாவுக்கும் அவருக்காகவும் கொடுப்போமாக. நம்முடைய எல்லாவற்றையும் நமக்குக் கொடுத்திருக்கிற அந்த ஒருவருக்குத் தகுதியான இந்த ஈவுகளை போதுமானதாக பெரிதாகவும், நன்மையானதாகவும் இருக்கவும் இருக்காது. **- P ’33, 148.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**அப் 8:18-20; சங் 34:10; 68:18,35; 84:11; பிர 2:26; ஏசா 42:5; எசே 11:19; தானி 2:21-23; மத் 11:28; 25:14-30; யோவா 6:27; 16:23,24; 17:22; ரோம 5:16-19; 8:32; 12:6-8; 1கொரி 13:1-3; 1பேது 4:10.**

**கோபுர வாசிப்பு : Z ’16, 217 (R 5926).**

**வினாக்கள் : தேவனுடைய ஈவுகளுக்கு நான் என்ன கைமாறு செய்தேன்? எப்படி? ஏன்? அதில் உதவியாக இருந்ததும், இடையூறாக இருந்ததும் எவை? பலன் என்ன?**